வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

FWC

| தரம் :- 13 (2020) | கணக்கீடு - I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. கீழ்வருவனவற்றுள் பொதுநோக்கு நிதியறிக்கையிடலின் நோக்கங்கள் தொடர்பான சரியான கூற்று கூற்றுக்கள் எது/எவை ?

A. அவை நிறுவனத்தின் நிதித் தகவல்களை கோருவதற்கு அதிகாரம் கொண்டிராதவர் களுக்கு தகவல்களை வழங்கும் நோக்கம் உடையவையாகும்.

B. அவற்றின் குறிக்கோள் பயன்பாட்டாளருக்கு அவர்கள் சார்ந்த தீர்மானம் மேற்கொள்ள தேவையான நிதித்தகவல்களை வழங்குவதாகும்.

C. அவை பயன்பாட்டாளருக்கு தேவையான சகல நிதிசார் தகவல்களையும் வழங்குகின்றது.

D. அவை அறிக்கையிடப்படும் நிறுவனத்தின் பெறுமதியை காட்டும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

1) A மட்டும் 2) A, B மட்டும் 3) B, C, D மட்டும் 4) A, B, D மட்டும் 5) A, B, C, D எல்லாம்

(……….)

02. சாருகா தனது வியாபாரத்தை ரூ.150 000 மூலதனமிட்டு 2020 ஜன 01 ம் திகதி ஆரம்பித்தார். இம்மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

ஜனவரி 05 – கடன் கொள்வனவு ரூபா. 100,000

ஜனவரி 07 – ரூ.30,000 கிரயமான பொருட்கள் ரூ.50,000 வுக்கு கடனுக்கு விற்றார்

ஜனவரி 15 – கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூபா.20,000

ஜனவரி 20 – கடன் கொடுத்தோனுக்கு கொடுத்த காசு ரூபா. 50,000

பெப்ரவரி 05 – சாருகா தனது சொந்த உபயோகத்திற்கு ரூபா. 10,000 ஐக் காசாகப்பற்றியுள்ளார்

பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் ஜனவரி 31 ஆம் திகதியன்று சாருகாவின் வியாபாரத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றைச் சரியாகக் காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்துக்கள் ரூபா | = | பொறுப்புக்கள் ரூபா | + | உரிமையாண்மை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1) | 260,000 | = | 100,000 | + | 160,000 |
| 2) | 210,000 | = | 50,000 | + | 140,000 |
| 3) | 210,000 | = | 50,000 | + | 160,000 |
| 4) | 220,000 | = | 50,000 | + | 170,000 |
| 5) | 240,000 | = | 80,000 | + | 190,000 |

(……….)

03. வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலொன்றின் காரணமாக ஏற்பட்ட தாக்கமொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டின் ஊடாக பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது.

| சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் | + | உரிமை |
|---|---|---|---|---|
| | = | − 33 000 | + | 33 000 |

இதன் மூலம் வெளிக்காட்டப்படும் கொடுக்கல் வாங்கலாக இருப்பது

1) வங்கிக்கடன் ரூ. 30,000 உரிமையாளர் தனது நிதியில் இருந்து செலுத்தி இருந்தார்
2) கடன்கொடுத்தோருக்கு உரிமையாளரால் சொந்த நிதியில் செலுத்திய காசு ரூ. 30,000 பெற்ற கழிவு ரூ. 3,000 ஆகும்
3) ரூ. 3,000 வட்டி உள்ளடங்கலாக செலுத்திய வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ.33,000
4) வணிகத்தின் காசில் இருந்து வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ. 33,000 செலுத்தப்பட்டது. இதில் ரூ. 3,000 வட்டி உள்ளடங்கும்
5) உரிமையாளர் தனது சொந்த நிதியில் இருந்து வணிக வங்கிக்கடன் ரூ.30,000 உம், வட்டி ரூ. 3 000 உம் செலுத்தப்பட்டது (..........)

04. மாறன் நிறுவனம் அழகன் தளபாட கம்பனியிடம் இருந்து ரூ 1000,000 பட்டியல் விலையான அலுவலகத் தளபாடங்களை 10 % வியாபாரக்கழிவு அனுமதித்த பின்னர் கடனுக்கு கொள்வனவு செய்தது. அழகன் கம்பனிக்கு இத் தளபாடங்களின் கிரயம். ரூபா 600,000 ஆக இருந்தது. மாறன் நிறுவனத்திடம் இருந்து 5 % காசுக்கழிவு கழித்த பின் ரூ 855,000 காசு பெற்றப்பட்டது மேலே கூறிய கொடுக்கல் வாங்கல்களை மாறன் நிறுவனத்தில் ஏட்டில் பதிவதற்கான மூல ஆவணங்கள்,

1) பட்டியல், பற்றுச்சீட்டு
2) பட்டியல், கைச்சாத்து.
3) நாட்குறிப்பு உறுதிசீட்டு, கைச்சாத்து
4) பட்டியல், பற்றுசீட்டு, நாட்குறிப்பு உறுதிசீட்டு
5) நாட்குறிப்பு உறுதிசீட்டு பற்றுசீட்டு (..........)

05. வணிகமொன்றின் வங்கிக்கூற்று 2020 மார்ச் 31ந் திகதியில் ரூபா. 25,000 வரவு மீதியினை (மேலதிகப்பற்று) காட்டியது. வங்கிக் கூற்றினை கணக்கேடுகளுடன் செவ்வை பார்த்தபோது கீழ்வரும் தகவல்கள் தெரியவந்தன:

28 பெப்ரவரி 2020 இல் காணப்பட்ட ரூபா 19,000 பெறுமதியான தேறாத காசோலைகளில் ரூ.15,000 மாத்திரம் 2020 மார்ச் மாதத்தின்போது தேறியிருந்தது.

28 பெப்ரவரி 2020 திகதியில் இருந்த ரூ. 35,000 கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளில் ரூ.25,000 க்கு மாத்திரம் 2020 மார்ச் மாதத்தின்போது கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டது.

மார்ச் மாதத்தில் வழங்கிய ரூ. 11,000 பெறுமதியான காசோலைகள் மாதஇறுதி வரையில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

மார்ச் மாத வங்கிக்கூற்றில் உள்ள வங்கிக் கட்டணம் ரூ.2,000 காசுக்கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

2020.03.31ந் திகதி நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய வங்கிமீதியின் முன்கொணரற் பெறுமதி என்ன?

1) ரூபா 12,000 மேலதிகப் பற்று
2) ரூபா 42,000 மேலதிகப் பற்று
3) ரூபா 2.000 செலவு மீதி
4) ரூபா 25,000 செலவு மீதி
5) ரூபா 000 மீதி (..........)

06. பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது / சரியானவை

A. பணஅளவீட்டு எண்ணக்கரு குறிப்பிடுவது யாதெனில் நிதிக்கூற்றுக்களில் காணப்படும விடயங்கள் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.
B. பண அளவீட்டு எண்ணக்கருவின்படி ஊழியர்களின் தேர்ச்சி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படும்.
C. ஏற்பாடுகளை நிதிநிலைமைக்கூற்றில் பொறுப்பொன்றாக இனங்காண்பதற்கான அடிப்படையை முன்னெச்சரிக்கை எண்ணக்கரு வழங்குகிறது.

1) A, C மட்டும் 2) A, B மட்டும் 3) C மட்டும் 4) A, B, C எல்லாம் 5) B மட்டும் (..........)

07. பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது சரியானவை

A. நிலுவை எண்ணக்கரு பொருளாதாரப்பெறுபேற்றை சிறந்த முறையில் மதிப்பீடு செய்கிறது.

B. காலமொன்றுக்கான வருமானம் இனங்காணப்படுவது அதனை உழைக்கப்படும் போதாகும்.

C. கொடுக்கல்வாங்கல் ஒன்றின் சட்டவடிவம் நிதிக்கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருத்தல் வேண்டும்

1) A, C மட்டும் 2) A, B மட்டும் 3) C மட்டும்

4) A, B, C எல்லாம் 5) B மட்டும் (……….)

08. தொடர்ந்து செல் எண்ணக்கரு தொடர்பாக பொருத்தமான கூற்று / கூற்றுக்கள்?

A. இது நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அடிப்படை எடுகோளாகும்

B. இது நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் தயாரிக்கப்படவேண்டும் என்கிறது.

C. இது நீண்ட வரையறையற்ற எதிர்காலத்திற்கு நிறுவனம் தொடர்ந்து இயங்கிச் செல்லும் என கருதுகிறது.

D. இது வரலாற்றுகிரய எண்ணக்கரு பின்பற்றப்படுவதற்கு அவசியமாகும்.

1) A,C மாத்திரம் 2) A, D மாத்திரம் 3) C மாத்திரம்

4) A, C, D மாத்திரம் 5) A, B, C, D எல்லாம் (……….)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 9, 10,11 ஆம் வினாக்களுக்கு விடையளிக்கவும்**

பின்வரும் தகவல்கள் மிதுசா வணிகத்தில் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்களில் இருந்து பிரிக்கப்பட்டவையாகும்.

| | |
|---|---|
| விற்பனை | 2250,000 |
| விற்பனைக்கிரயம் | 1150,000 |
| விநியோகச்செலவுகள் | 300,000 |
| நிர்வாகச்செலவுகள் | 250,000 |
| நிதிச்செலவுகள் | 100,000 |

எனினும் வரைவு நிதிக்கூற்றுக்களைத்தயாரித்த பின்னர் மேற்கொள்ளப்பட்டபரிசோதனையின் போது பின்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- உட்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 50,000 பொதுப்பேரேட்டுக்கு மாற்றப் பட்டிருக்கவில்லை
- 31.03.2019 இல் உள்ளவாறான சென்மதியான காரியாலய உத்தியோதத்தர் சம்பளங்கள் ரூ.60,000 கணக்கு வைக்கப்படவில்லை, 31.03.2019 இல் முற்பணமாகச்செலுத்தப்பட்டிருந்த கட்டட வாடகை ரூ.30,000 நிர்வாகச்செலவொன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது.
- விநியோக வாகனங்களின் பெறுமானத்தேய்வு ரூ.50,000 நிர்வாச்செலவினுள் உள்ளடங்கியுள்ளது
- செலுத்திய விற்பனைத்தரகு ரூ.30,000 விற்பனைக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

09. தேவையான திருத்தங்களைச் செய்த பின்னர் 31.03.2019..இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான விநியோகச்செலவுகள், நிர்வாகச்செலவுகள்

| | **விநியோகச்செலவுகள்** | **நிர்வாகச்செலவுகள்** |
|---|---|---|
| 1) | ரூ. 350,000 | 380,000 |
| 2) | ரூ. 380,000 | 230,000 |
| 3) | ரூ. 230,000 | 380,000 |
| 4) | ரூ. 380,000 | 170,000 |
| 5) | ரூ. 230,000 | 170,000 |

(……….)

10. தேவையான சீராக்கங்களைச் செய்த பின்னர் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம்
1) ரூ. 340,000 2) ரூ. 400,000 3) ரூ. 265,000 4) ரூ. 370,000 5) ரூ. 420,000 (..........)

11. தேவையான சீராக்கங்களைச் செய்த பின்னர் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானமும் மொத்தசெலவும்

| | **மொத்தவருமானம்** | **மொத்தசெலவும்** |
|---|---|---|
| 1) | ரூ. 2250,000 | ரூ. 1,800,000 |
| 2) | ரூ. 2280,000 | ரூ. 1,860,000 |
| 3) | ரூ. 2230,000 | ரூ. 1860,000 |
| 4) | ரூ. 2230,000 | ரூ. 710,000 |
| 5) | ரூ. 2280,000 | ரூ. 1800,000 |

(..........)

12. நிறுவனமொன்றின் களஞ்சியத்தில் 31.03.2019 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதன்வியாபர இருப்பக்கள் முழுவதும் அழிவடைந்தன 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்காக பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | ரூ.000" |
|---|---|
| 01.04.2018 இல் உள்ளவாறான வியாபார இருப்புக்கள் | 750 |
| கொள்வனவுகள் | 2250 |
| விற்பனைகள் | 3000 |
| உட்சுமைகூலி | 300 |

இந்நிறுவனம் விற்பனை விலையில் 20% இலாபம் உள்ளடக்கி விற்பனை செய்கிறது
காப்புறுத்திக்கம்பனியானது 31.03.2019 இல் இருந்தவாறான இருப்புக்களின் கிரயத்தில் 80% இனை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.
31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட இருப்பு தொடர்பான செலவு யாது?

1) ரூ. 180,000 2) ரூ.720,000 3) ரூ.900,000 4) 2400,000 5) ரூ. 2580,000 (..........)

13. தளபாடப் பொருட்களை உற்பத்திச் செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்று 2019.03.31 இல் முடிவடைந்த காலப் பகுதிக்குப் பொருத்தமான தகவல்கள பின்வருமாறு தந்துள்ளது.

| | **ரூபா.** |
|---|---|
| மரக்கொள்வனவு | 200 000 |
| தொழிற்சாலை மேந்தலை கிரயம் | 48 000 |
| தளபாடப் பொருட்களின் களஞ்சிய கிரயம் | 50 000 |
| தொழிற்சாலை இயந்திரம் (கிரயம்) | 120 000 |
| மரங்களைக் உட்கொண்டுவரல் கூலி | 40 000 |
| உற்பத்திக்கூலி | 300 000 |

பொறி இயந்திரங்களுக்கான வருடாந்த தேய்மானம் கிரயத்தில் 10% தொழிற்சாலை மேந்தலை கிரயத்தினுள் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. காலப்பகுதியில் 200 மேசைகள் உற்பத்திச் செய்யப்பட்டு 150 மேசைகள் விற்பனை செய்யப்பட்டன.
2019.03.31 திகதியில் சரக்கிருப்பின் கிரயம், விற்பனைக் கிரயம்

| | **சரக்கிருப்பின் கிரயம்** | **விற்பனைக் கிரயம்** |
|---|---|---|
| 1) | ரூபா 162,500 | ரூபா 487,500 |
| 2) | ரூபா 150,000 | ரூபா 450,000 |
| 3) | ரூபா 189,500 | ரூபா 568,500 |
| 4) | ரூபா 650,000 | ரூபா 487,500 |
| 5) | ரூபா 600000 | ரூபா 450,000 |

(..........)

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 14.ஆம் 15 ஆம் வினாக்களுக்கு விடையளிக்கவும்**

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் கம்பனியொன்றின் 2020 ஜனவரி மாதத்திற்கான சம்பளப் பட்டியலிலிருந்து பிரித்தறியப்பட்டன. சம்பளம் 2020 பெப்ரவரி 5ந் திகதி செலுத்தப்பட்டது.

| | |
|---|---|
| ஊழியரின் மொத்தச் சம்பளம் | ரூ. 1,000,000 |
| ஊழியர் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஊ.சே.நிதி | ரூ. 100,000 |
| ஊ.சே.நிதி இற்கான தொழில் கொள்வோர்பங்களிப்பு 15% | ரூ. 150,000 |
| ஊ.ந.நிதி இற்கான தொழில் கொள்வோர்பங்களிப்பு 3% | ரூ. 30,000 |

14. 2020 ஜனவரி மாத மாதாந்த நிதிக்கூற்றுக்களில் பிரசுரிக்கப்பட வேண்டிய தகவல்கள்-:

| | **செலுத்த வேண்டிய நிகர சம்பளம் (ரூபா)** | **ஊழியச் செலவு (ரூபா)** | **செலுத்த வேண்டிய ஊ.சே.நிதி (ரூபா)** |
|---|---|---|---|
| 1) | 900,000 | 1,000,000 | 150,000 |
| 2) | 900,000 | 1,250 000 | 250,000 |
| 3) | 750,000 | 1,075,000 | 280,000 |
| 4) | 720,000 | 1,057,000 | 150,000 |
| 5) | 900,000 | 1,180,000 | 250,000 |

(……….)

15. 31.01.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான E.P.F செலவுகள் 31.01.2020 இல் உள்ள வாறான E.P.F பொறுப்பு ஆகியவற்றைப்பதிவதற்கான சரியான இரட்டைப்பதிவு யாது?

| | | **வரவு.ரூ** | **செலவு.ரூ** |
|---|---|---|---|
| 1) | E.P.F செலவுகள் கணக்கு | 100,000 | |
| | E.P.F சென்மதி கணக்கு | | 100 000 |
| 2) | E.P.F செலவுகள் கணக்கு | 150 000 | |
| | E.P.F சென்மதி கணக்கு | | 150 000 |
| 3) | E.P.F செலவுகள் கணக்கு | 250 000 | |
| | E.P.F சென்மதி கணக்கு | | 250 000 |
| 4) | E.P.F செலவுகள் கணக்கு | 100,000 | |
| | சம்பளச்செலவுகள் கணக்கு | 150 000 | |
| | E.P.F சென்மதி கணக்கு | | 250 000 |
| 5) | E.P.F செலவுகள் கணக்கு | 150,000 | |
| | சம்பளச்செலவுகள் கணக்கு | 100 000 | |
| | E.P.F சென்மதி கணக்கு | | 250 000 |

(……….)

16. நலன்புரி சங்கமொன்றின் 2020.03.31 முடிவடைந்த நிதியாண்டுக்குரிய தகவல்களில் சில பின்வருமாறு,

| | 2020.03.31 | 2019.04.01 |
|---|---|---|
| திரண்ட நிதி | 420 000 | 350 000 |
| நிலுவை அங்கத்துவச் சந்தா | 30 000 | 20 000 |

**மேலதிக தகவல்கள் :**

1. சங்கத்தினால் வருடத்தினுள் செலவிடப்பட்ட தொகை ரூபா 140 000 ஆகும்.
2. வருடத்தினுள் கிடைத்த சங்ககட்டிடம் கட்டுவதற்காக கிடைத்த நன்கொடை ரூ. 50,000 ஆகும்.
3. வருடத்தினுள் கிடைத்த அங்கத்துவச் சந்தா ருபா 50 000 ஆகும்.
4. சங்கத்தினால் சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்திச் செல்லப்படுகின்றது.

2020.03.31 இல் முடிவடைந்த வருடத்தினுள் சிற்றுண்டிச்சாலையிலிருந்து கிடைத்த இலாபம்.

1) ரூபா 80 000 2) ரூபா 90 000 3) ரூபா 100 000 ஆகும்.
4) ரூபா 130 000 5) ரூபா 150 000 ஆகும். (……….)

17. பங்குடமை ஒப்பந்தமொன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கியுள்ளன.

A. நிறுவன தொழிற்பாட்டுக்கு பங்காளனின் கட்டடம் பயன்படுத்தபடுவதால் வருடாந்த வாடகை

B. பங்காளர்களினால் இலாபநட்டம் சமனாகப் பகிரப்படல் வேண்டும்.

C. எல்லாப் பங்காளர்களுக்கும் வருட சம்பளம் உரித்தாகும்.

D. மூலதன மீதிக்கு வட்டி பெறுவதற்கு பங்காளர்களுக்கு உரிமையுண்டு.

E. மூலதனத்திற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட கடன் பணத்திற்கு வருட வட்டி உரித்தாகும்.

மேற்கூறிய விடயங்களில் பங்குடமை வியாபார இலாபத்தை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்துபவை.

1) A மட்டும் 2) B மட்டும் 3) B, C . மட்டும்

4) A, E மட்டும் 5) A, B, C, D, E எல்லாம் (……….)

18. LKAS 08: கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களுக்கு அமைய பின்வரும் கூற்று கூற்றுக்கள் எது.எவை சரியானது சரியானவை?

A. நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போதும் சமர்ப்பிக்கும் போதும் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், அடிப்படைகள், மரபுக்கள்,விதிகள்,நடைமுறைகள் ஆகியன கணக்கீட்டுக்கொள்கை எனப்படும்.

B. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய தகவல்கள் பயன்படுத்தப்படாமை அல்லது உரியவாறு பயன்படுத்தப்படாமையினால் முன்னைய நிதியாண்டொன்றில் அல்லது பலவற்றில் விடுபடுதல்களும் தகவல்களைப் பிழையாகக் காட்டியிருத்தலுமே வழுக்கள் எனப்படும்

C. சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக உத்தேச எதிர்கால நலன்கள், கடப்பாடுகள் என்பன எதிர்காலத்தில் காணப்படக்கூடிய நிலைமைக்கேற்ப மதிப்பிடும் போது சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் தேறிய பெறுமானத்திற்குத் தேவையான சீராக்கங்களே கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் என அழைக்கப்படும்.

D. புதிய தகவல்கள் அல்லது புதிய அபிவிருத்திகள் மற்றும் தற்போதைய நிலையினை மீள்மதிடல் காரணமாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன

1) A, C மட்டும் 2) B, D மட்டும் 3) A, B, C .மட்டும்

4) A, D மட்டும் 5) A, B, C, D எல்லாம் (……….)

19. LKAS - 2 (சரக்கிருப்பு)ன் படி பின்வருவனவற்றில் எதனை இருப்புக்களின் கிரய வகையாக அடையாளப்படுத்த முடியும்.

A. நேர்மூலப்பொருள் மற்றும் உற்பத்திக்கூலிக்கிரயம்

B. நேர்மூலப்பொருளின் அசாதாரண விரயம்

C. முடிவடைந்த பொருட்களின் களஞ்சியப்படுத்தல் கிரயம்

D. விற்பனைக்கு தயாராக வைத்திருப்பதற்கு ஏற்படும் ஏனைய நோக்கிரயம்

1) A, B மாத்திரம் 2) B, D மாத்திரம் 3) A, D மாத்திரம்

4) A, B, D மாத்திரம் 5) A, B, C, D எல்லாம் (……….)

20. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் வரையறுத்த சினேகா பொதுக்கம்பனியின் மோட்டார் வாகனங்கள் தொடர்பானவையாகும். **(ரூபா 000)**

- 2018.04.01 இலுள்ளவாறு கொண்டுசெல்லும் தொகை 1350
- 2019.03.31 இலுள்ளவாறு கொண்டுசெல்லும் தொகை 1300
- 2018.10.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிய வாகனகிரயம் 500
- 2019.01.01 இல் வாகனங்களில் ஒன்று அகற்றிப்பெற்ற தொகை 100

அகற்றப்பட்ட மோட்டார் வாகனம் ரூ 300,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இவ்வாகன அகற்றலினால் ஏற்பட்டநட்டம் ரூபா 75,000

2019.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மோட்டார் பெறுமானத் தேய்வு ?

1) ரூ. 125 000 2) ரூ. 200,000 3) ரூ. 250,000 4) ரூ. 275,000 5) ரூ. 375,000 (……….)

21. 01.04.2019 ல் வவுனியா கம்பனியானது யாழ் கம்பனியுடன் ஒப்பந்தம் ஒன்றினைச்செய்தது அதற்கமைய 31.03.2020 தொடக்கம் ரூபா 300,000 ப்படி மூன்றாண்டுகளுக்கு குத்தகைக் கொடுப்பனவைச் செலுத்துவதன் மூலம் இயந்திரம் பயன்படுத்ததும் உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டது. குத்தகையின் உள்ளார்ந்த வட்டிவீதம் வருடத்திற்கு 10% ஆகும்.

கழிவுக்காரணி 10% வீதத்தில்

| வருடம் | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| கழிவுக்காரணி | 0.91 | 0.83 | 0.75 |

01.04.2019 ல் இயந்திரத்தின் ஆரம்ப மதிப்பீட்டு நிகழ்காலப்பெறுமதி யாது?

1) ரூ. 900 000 2) ரூ. 747,000 3) ரூ. 675,000 4) ரூ.810,000 5) ரூ.720,000 (……….)

22. வரையறுத்த கிருசி கம்பனி 2019.04.01 இல் 60,000 சாதாரணபங்குகள் ரூபா 3000,0000 பெறுமதியில் கொண்டிருந்தது. அன்றையதினம் 5:1 என்னும் விகிதத்தில் சாதாரண பங்குதாரர்களுக்கு ஒன்று ரூபா 20 பெறுமதியான பங்குகள் ஒதுக்கங்கள் மூலதனமாக்கி வழங்கப்பட்டது மேலும் 2020.01.01 இல் 8 : 1 என்னும் விகிதத்தில் ஒவ்வொன்றும் ரூபா 50 பெறுமதியான உரிமை வழங்கல் செய்யப்பட்டது. அவர்களின் முழு உரிமைகளும் பயன் படுத்தப்பட்டது

2020.03.31 இல் சாதாரணபங்குக்கணக்கில் ஏற்படும் மாற்றமும், பங்குதாரர் உரிமையில் ஏற்படும் மாற்றமும் முறையே?

| சாதாரணபங்கு மாற்றம் | உரிமையில் மாற்றமும் | |
|---|---|---|
| 1) ரூபா 450,000 | ரூபா 240,000 | |
| 2) ரூபா 690,000 | ரூபா 450,000 | |
| 3) ரூபா 690,000 | ரூபா 690,000 | |
| 4) ரூபா 450,000 | ரூபா 690,000 | |
| 5) ரூபா 3,690,000 | ரூபா 690,000 | (……….) |

23. பின்வரும் கூற்றுகளில் எவை கம்பனி ஒன்றின் மொத்த முற்றும் அடங்கிய வருமானம் (Total Comprehensive income) தொடர்பில் சரியானது?

A. இது காலப்பகுதிக்கான இலாபம், ஏனைய முற்றும் அடங்கிய வருமானம் ஆகிய இரண்டினதும் மொத்தமாகும்.

B. இது குறித்தவொரு காலப்பகுதியினுள் இனம் காணப்பட்ட எல்லா வருமானங்களுக்கும், செலவுகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

C. இது குறித்தவொரு காலப்பகுதியினுள் இனம்காணப்பட்ட எல்லாச்செயற்பாட்டு வருமானங்களுக்கும் மொத்தச் செலவுகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

D. இது குறித்தவொரு காலப்பகுதியினுள் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.

1) A, B ஆகியன மாத்திரம் 2) A, C ஆகியன மாத்திரம் 3) B, D ஆகியன மாத்திரம்

4) C, D ஆகியன மாத்திரம் 5) A, B, D ஆகியன மாத்திரம் (……….)

❖ 31.03.2019 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வரையறுத்த அரவிந்த் பொதுக்கம்பனியுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24, 25 ஆம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

| விபரம் | ரூ. 000 |
|---|---|
| மொத்த வருமானம் | 1500 |
| மொத்தச் செலவு | 500 |

- மொத்த வருமானமானது மோட்டார் வாகனங்களின் மீள் மதிப்பு மிகை ரூபா 200,000 யும், கட்டட விற்பனை மீதான இலாபம் ரூபா.300,000 மற்றும் விற்பனையும் உள்ளடக்கியுள்ளது.
- கம்பனியானது 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்தில் மோட்டார் வாகன மீள்மதிப்பு குறைவு ரூ. 150,000 இனை பதிந்துள்ளதுடன் இது செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

24. கம்பனியால் இனங்காணப்பட்டுள்ள.31.03.2019 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான விற்பனை வருமானம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் என்பன யாவை?

| **விற்பனை வருமானம் ரூ.000** | **ஏனைய முற்றுமடங்கிய வருமானம் ரூ.000** |
|---|---|
| 1) 1150 | 50 |
| 2) 1000 | 50 |
| 3) 1000 | 200 |
| 4) 1200 | 150 |
| 5) 1150 | 200 |

(……….)

25. கம்பனின் 31.03.2019 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் மற்றும் காலப்பகுதிக்கான இலாபம் என்பன யாவை?

| | மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூ.000 | காலப்பகுதிக்கான இலாபம் ரூ.000 |
|---|---|---|
| 1) | 950 | 950 |
| 2) | 1000 | 800 |
| 3) | 1000 | 950 |
| 4) | 1100 | 900 |
| 5) | 1100 | 1050 |

(……….)

❖ **26, 27 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்தரப்படும் தகவல்களைப் பயன்படுத்துக.**
வரையறுக்கப்பட்ட ஜெயம் பொது கம்பனி கீழ்வரும் கணக்கின் மீதி தரப்பட்டுள்ளது.

| | 2019.03.31. இல் (ரூ. 000) | 2018.03.31 இல் (ரூ. 000) |
|---|---|---|
| இருப்பு | 50 | 150 |
| வியாபாரவருமதிகள் | 300 | 200 |
| வியாபாரகொடுக்குமதிகள் | 100 | - |
| செலுத்த வேண்டிய வட்டி | 50 | 30 |
| செலுத்த வேண்டிய வரி | 10 | 20 |

| **வேறு தகவல்கள்** | (ரூபா 000) |
|---|---|
| விற்பனைகள் | 800 |
| விற்பனைக் கிரயம் | 400 |
| மொத்தச் செலவுகள் | 200 |
| காலப்பகுதிக்கான இலாபம் | 200 |

மேற்குறித்த மொத்த செலவுகளுக்குள் கீழ் வரும் செலவுகள் அடங்கியுள்ளன.
வட்டிச்செலவு .ரூ.40,000 பெறுமானத்தேய்வு ரூ.80,000,வருடவருமானவரிச் செலவு ரூ. 50,000

26. LKAS - 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) நியமத்திற்கு அமைய 2019.03.31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல் எவ்வளவு?

1) ரூ. 250 000 2) ரூ. 380 000 3) ரூ 390 000
4) ரூ. 310 000 5) ரூ 290 000 (……….)

27. தேறிய இலாப வீதம் எவ்வளவு? இருப்புப் புரள்வு வீதம் எத்தனை தடவைகள்?

| **தேறிய இலாப வீதம்** | **இருப்புப் புரள்வு வீதம்** |
|---|---|
| 1) 50 % | 3 தடவைகள் |
| 2) 20 % | 3 தடவைகள் |
| 3) 25 % | 4 தடவைகள் |
| 4) 30. % | 6 தடவைகள் |
| 5) 25 % | 8 தடவைகள் |

(……….)

28. கம்பனியொன்றின் நிதிநிலைமைக்கூற்றில் இருந்து 31.03.2020 இலும், 31.03.2019 இலும் எடுத்தவைகள்

| | **31.03.2020 இல்,** | **31.03.2019 இல்** |
|---|---|---|
| சரக்கிருப்பு | 120 000 | 80 000 |
| வியாபார வருமதிகள் | 20 000 | 30 000 |
| உரிமையாண்மை | 600 000 | 500 000 |
| பொறுப்புக்கள்(கடன்கள்) | 300 000 | 350 000 |

2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள் ரூ.400,000 இவற்றுள் ரூ.250,000 கடன் விற்பனைகளாகும், மொத்த இலாபப்பங்கு விற்பனையில் 25%. ஆகப் பராமரிக்கப்படுகிறது.
2020.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கு கடன்பட்டோர் புரள்வு விகிதம்., கடன் உரிமையாண்மை விகிதம்.

| **கடன்பட்டோர் புரள்வு விகிதம் தடவைகள்** | **உரிமையாண்மையில்கடன் விகிதம்** |
|---|---|
| 1) 12.5 | 50 |
| 2) 10 | 70 |
| 3) 16 | 20 |
| 4) 10 | 50 |
| 5) 16 | 32 |

(..........)

29. சிக்கனக்கட்டளைத்தொகை மாதிரிக்கான எடுகோளாக இல்லாதது பின்வருவனவற்றுள் எது?
1) மொத்தஇருப்பு வைத்தற்கிரயமானது சாராசரிசரக்கிருப்பு மட்டத்துடன் நேரடியாகமாறுபடும்.
2) மொத்தக்கட்டளைக்கிரயமானது கட்டளையிடும் எண்ணிக்கையுடன் நேரடியாக மாறுபடும்.
3) சரக்கிருப்பானது இழிவுமட்டத்தினை அடைந்தவுடன் அது உடனடியாக மீள்நிரப்பப்படும்.
4) கேள்வி ஏற்கனவே தெரிந்ததாகவும் நுகர்வானது சமச்சீராக காலம்பூராகவும் இடம்பெறுவதாக இருக்கும்.
5) கட்டளையிடும் போது கழிவுகள் அனுமதிக்கப்படும். (..........)

30. கம்பனியொன்றில் A எனும் மூலப்பொருள் தொடர்பாக பின்வரும் தகவல்கள் தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சராசரி பாவனை அலகுகள் வாரமொன்றுக்கு | 300 | அலகுகள் |
| இழிவு இருப்பு மட்டம் | 1 800 | அலகுகள் |
| மறுகட்டளைத் தொகை | 1 600 | அலகுகள் |

விநியோக காலம்- ஆகக் கூடியது 42 நாட்கள், ஆகக் குறைந்தது 14 நாட்கள் மறுகட்டளை இருப்பு மட்டம், உயர்வு இருப்பு மட்டம் யாது?

| | | |
|---|---|---|
| 1) | 4,400 அலகுகள் | 5,200 அலகுகள் |
| 2) | 2,400 அலகுகள் | 4,600 அலகுகள் |
| 3) | 10,200 அலகுகள் | 10,400 அலகுகள |
| 4) | 3,900 அலகுகள் | 9,600 அலகுகள் |
| 5) | 3,000 அலகுகள் | 4,400 அலகுகள் |

(..........)

❖ **31 - 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக**

31. முகாமைக்கணக்கீட்டுத் தொழிற்பாட்டுப் பணிகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியானது எனில் சரி எனவும் பிழையனது எனில் பிழை எனவும் குறிப்பிடுக?
A. செயற்றிட்ட மதிப்பீட்டுக்கு காசுப்பாய்சலை மதிப்பிடல் . ................................................
B. தீர்மானம் எடுத்தலுக்கு கிரயங்களை பகுப்பாய்வு செய்தல் ................................................
C. வருடாந்தப் பாதீட்டினை தயாரிக்கிறது ................................................
D. வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் ................................................

32. நிறுவனமொன்று 2020.03.31. ல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பின்வரும் தகவல்களை வழங்குகிறது.

வருடத்திற்கான இலாபம் ரூ. 140,000
அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் ரூ. 150,000
வருடத்திலான காசுப்பற்றுக்கள் ரூ. 40.000
மொத்தச் சொத்துக்களின் அதிகரிப்பு ரூ. 100 000

31.03.2020 ல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மொத்தப் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் ரூ ……............................................................................................................................

33. நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு சட்டகத்திற்கேற்ப பின்வருவனவற்றுள் பொறுப்பொன்றின் பண்புகளில் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| A. | அதனுடன் தொடர்புடையதாக நிறுவனத்திற்கு நிகழ்காலக் கடப்பாடொன்று காணப்படல். | |
| B. | அதன் பெறுமதியினை அல்லது தீர்வு செய்யக்கூடிய பெறுமதியினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல். | |
| C. | தவிர்த்துக்கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டிராத நிறுவனத்தின் கடப்பாடு | |
| D. | பொருளாதார வளப்பரிமாற்றத்தை தரக்கூடியது | |

34. மதுரா வியாபாரம் மாதமொன்றிற்கான சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி ரூ 5000 மாகும். நான்கு மாதங்களுக்கா சில்லறை காசு கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
எழுத்துக்களுக்கு பொருத்தமான பெறுமானங்களைத் தருக

| விபரம் | முதலாம் மாதம் | இரண்டாம் மாதம் | மூன்றாம் மாதம் | நான்காம் மாதம் |
|---|---|---|---|---|
| மீ மு.கொ.வ | 2500 | A……… | 200 | D………… |
| காசு பெற்றது | 2500 | 4200 | C……….. | 4100 |
| சில்லறைகாசு கச்சாத்துக்களின் பெறுமதி | 4200 | B………… | 4100 | 4750 |

35. கீழ்வரும் கூற்றுக்களுள் நிதிக்கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் முதன்மைப் பதிவேடுகள் தொடர்பில் எது சரியானது எது பிழையானது எனக் குறிப்பிடுக?

| | | |
|---|---|---|
| A. | கொடுக்கல்வாங்கலொன்று ஆரம்பத்தில் ஒரு முதன்மைப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட பின்னர் அதன் உரிய மூல ஆவணம் தேடப்படும். | |
| B. | முதன்மைப் பதிவேடுகள் என்பது நிறுவனம் கொடுக்கல் வாங்கலொன்றின் மூல ஆவணங்களை பயன்படுத்தி முதலில் அந்த கொடுக்கல் வாங்கலை பதிவு செய்யும் ஏடு ஆகும் | |
| C. | விற்பனை நாளேடு , கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, பொது நாட்குறிப்பேடு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று ஆகியன முதன்மை பதிவேடுகளாக வகைப்படுத்தப்படலாம். | |
| D. | விற்பனைத் திரும்பல் நாளேட்டின் நோக்கம் வியாபாரம் அதன் வழங்குனருக்கு திருப்பியனுப்பும் பொருட்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளும் செலவுப் பதிவுக்குறிப்புக்களை பதிவுசெய்வதற்காகும் | |

36. பின்வருவனவற்றுள் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளை பேணுவதற்கான தேவையினை விபரிக்கும் கூற்றுக்களில் எது சரியானது எது பிழையானது எனக் குறிப்பிடுக?

A. நாட்குறிப்புப் பதிவுகளை பதிவதற்கு. …………………
B. தனித்தனியான பல கணக்குகளிலும் பார்க்க ஒரு கணக்கினை மாத்திரம் பேணுவதன் மூலம் கிரயத்தினை குறைப்பதற்கு. …………………
C. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொத்த கடன் விற்பனைகளை அறிவதற்கு. …………………
D. தொகுக்கப்பட்ட தகவல்களுடன் பொதுப் பேரேட்டினை தயாரித்து, …………………
E. வழுக்களை கண்டுபிடித்தல். …………………

37. 2020 மார்ச் 28 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட B கம்பனியிடமிருநத்து் 100 அலகு பொருள் X இனைக்கொள்வனவு செய்யவுள்ள தமது நோக்கத்தினை அனில் என்பவர் கம்பனிக்குத் தெரிவித்தார் ஒரு அலகு X இன் விற்பனை விலை ரூ. 500 எனவும், தற்போது சரக்கிருப்பில் 75 அலகுகள் மாத்திரம் இருப்பதாகவும் எஞ்சியவை இப்போது உற்பத்தி செய்யப்பட்டு வருவதனால் எஞ்சிய 25அலகுகளையும் இன்னும் இரண்டு வாரங்களில் விநியோகிக்க முடியுமெனவும் கம்பனி B, அனிலுக்குத் தெரிவித்தது. அனில் முழுத் தொகையான ரூ. 50,000 இனைச் செலுத்தி 75 அலகுகளை 2020 மார்ச் 30 ஆந் திகதி பெற்றுச் சென்றதுடன், எஞ்சிய 25 அலகுகளைப் பின்னர் பெற்றுக்கொள்ள இணங்கினார்

2020 மார்ச். 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக வரையறுக்கப்பட்ட B கம்பனியினால் வருமானமாக காட்டப்படவேண்டிய தொகையினை இனங்காண்க ரூ ..........................................

38. பின்வருவனவற்றிற்கு கூற்றுக்களுக்கு பொருத்தமான எண்ணக்கருவினைத்தருக?

| | |
|---|---|
| 1) நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோரின் தீர்மானங்கள் மற்றும் கருத்துக்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய எனக் கருதப்படக் கூடிய விடயங்கள் | |
| 2) நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்ற சொத்துக்களை அவற்றினது தேறக்கூடிய பெறுமானத்தினடிப்படையில் வெளிப்படுத்தாது அவற்றைப் பெற்றுக் கொண்ட பெறுமானத்தில் வெளிப்படுத்துதல். | |
| 3) எதிர்கால பொருளாதார நன்மைகளினை உருவாக்காத அனைத்துச் செலவுகளும் நிதியாண்டுக்குரிய செலவுகள் ஆகும் | |
| 4) நிறுவனத்திற்கு வாய்ப்பாக அமையக்கூடிய சுற்றுச்சூழல் விடயங்கள் அது ஒரு சொத்தாக நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிப்பதில்லை | |

39. ஜெயந்தன் விளையாட்டுக் கழகத்தில் 31.03.2020 இல் 100 அங்கத்தவர்கள் உள்ளனர். அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தாப்பணம் ரூ. 1000 ஆகும். 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் சந்தாப்பணமாக ரூ.85,000 காசாகப் பெறப்பட்டது. முற்பணமாகப் பெற்ற சந்தா 31.03.2020, 31.03.2019 இலுள்ளவாறு முறையே ரூ. 5 000, ரூ. 3 000 ஆகும். பின்வருவனவற்றைக் கணிக்குக.

அ) 31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தா வருமானம் (ரூ) ...................................................

ஆ) 31.03.2020 இலுள்ள சந்தா நிலுவை (ரூ) ...........................................................................................

40. பங்குடைமையொன்றில் அமல், விமல், சலீம் ஆகிய மூவரும் இலாபநட்டங்களை முறையே 2.2.1 எனும் விகிதத்தில் பகிர்ந்து நடத்தினர். இப்பங்குடமையில் 2020.03.31 இல் விமல் விலகினார். அமலும் சலீமும் இலாப நட்பங்களை சமமாக பகிர்ந்து பங்குடமையைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தனர். 2020.03.31 இல் பங்காளர்களின் உரிமையாண்மை பின்வருமாறு காணப்பட்டது

| | **அமல்** | **விமல்** | **சலீம்** |
|---|---|---|---|
| மூலதன மீதி | 250 000 | 200 000 | 200 000 |
| நடைமுறை கணக்கு செலவு (வரவு) | (30 000) | 20 000 | 30 000 |

விமல் விலகிய தினத்தில் அவரின் நன்மதிப்பு பங்கு ரூபா 80,000 ஆக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்பட்டதுடன் விமலுக்கான கொடுப்பனவு காசு மூலம் மேற்கொள்ளப்பட்டது

1. விமலுக்கு செலுத்திய காசு யாது? ......................................................................................................
2. விமல் விலகிய பின்னர் புதிய பங்குடமையில் உரிமையாண்மை மீதியாது? …....................................

41. இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் (SLFRS) -16 (குத்தகை) ஏற்ப பின்வரும் கூற்றுக்களை சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் குறிப்பிடுக

| | | |
|---|---|---|
| A. | இதன்படி குத்தகை தொடர்பான கணக்குப் பதிவானது குறுங்கால மற்றும் குறைந்த பெறுமதியான குத்தகைச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது | |
| B. | இதன் படி குத்தகைச் சொத்தானது குத்தகைக்கு எடுப்பவரின் ஏடுகளில் நிதிக் அல்லது செயற்பாட்டுக் குத்தகை எனவகைப்படுத்தி பதியப்படுகின்றது | |
| C. | குத்தகைச் சொத்தானது, குத்தகை எடுத்தவரின் ஏடுகளில் "சொத்தைப்பயன் படுத்துவதற்க்கான உரிமை" என்ற தனியான வகுதிக்குள் நிதிநிலமைக் கூற்றில் சொத்தாகக் காட்டப்படும் | |
| D. | குறைந்த பெறுமதியான குத்தகைச் சொத்து மற்றும் குறுங்கால குத்தகைச் சொத்தின் பெறுமதியானது நேர்கோட்டு அடிப்படையில் அல்லது பொருத்தமான அடிப்படையில் அச்சொத்தின் குத்தகைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டுமுற்றும் மடங்கிய வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்படும். | |

❖ **42, 43 ஆகிய விடையளிப்பதற்கு கீழே உள்ள தரவுகளைப் பயன்படுத்துக.**

*2019.04.01 இல் நவீனா கம்பனியானது வாடிக்கையாளர் ஒருவருடன் இயந்திரமொன்றை விற்பனை செய்தல் மற்றும் இரண்டு வருட பராமரிப்புச் சேவையை வழங்குதல் தொடர்பான ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. அத்தினத்தில் இயந்திரமானது வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டதுடன், சட்டரீதியான உரிமையும் மாற்றம் செய்யபட்டது. வாடிக்கையாளர் இயந்திரம் மற்றும் இரண்டு வருடபராமரிப்புச் சேவைக்காக ரூபா 1,200,000 ஐ வழங்க முன்வந்துள்ளார்.*
*நவீனா கம்பனியால் இவ்விரண்டும் வெவ்வேறாக விற்பனை செய்யப்பட்டால், இயந்திரம் ரூபா 1,000,000 இற்கும் சேவை ரூபா 500,000 இற்கும் விற்பனை செய்யப்படும். 2019.04.30 இல் வாடிக்கையாளரினால் இதற்கானகொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.*

42. *இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் (SLFRS) - 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தம் மூலமாக உருவாகின்ற வருமானம்) ஏற்ப 2020.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக் கான வருமானம் மற்றும், 2020.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றில் காட்டவேண்டிய வியாபார வருமதிகள் மற்றும் பராமரிப்பு சேவைக்கான ஏற்பாடு என்பவற்றைக் கணிக்க.*
*1) வருமானம் ரூபா .................................... 2) வியாபார வருமதிகள் ரூபா...............................*

43. *2020.03.31 இல் பராமரிப்புச் சேவைக்கான ஏற்பாடு ரூபா ....................................*

44. *இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் (SLFRS) - 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தம் மூலமாக உருவாகினற் வருமானம்) ஏற்ப வாடிக்கையாளருடன் மேற் கொள்ளப் படும் ஒப்பந்தம் இந்நியமத்தின் பரம்பலுக்குள் உள்ளடங்குவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் யாவை?*

*1)* ..........................................................................................................................
*2)* ..........................................................................................................................
*3)* ..........................................................................................................................
*4)* ..........................................................................................................................

45. *கம்பனியொன்று 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் ஒவ்வொன்றும் ரூ. 30 விலையில் 100 000 சதாரண பங்குகளை வழங்கியது. 150 000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் முழுத் தொகையுடன் பெறப்பட்டன. கம்பனியானது 100 000 பங்குகளை விகிதாசார முறையில் ஒதுக்கீடு செய்ததுடன் மேலதிகப் பணம் விண்ணப்பதாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. பங்கு வழங்கற்செலவாக ரூபா 20,000 செலுத்தப்பட்டது பின்வருவனவற்றுக்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் தேவையில்லை)*

*அ)* பங்குகளுக்கான ஒதுக்கம் .....................................................................................
.....................................................................................

ஆ) இப் பங்கு வழங்கலினால் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ரூ. ......................................................................................

46. 2020.03.31இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கயனிகா கம்பனியின் தகவல்கள் பின்வருமாறு

| | ரூபா. "000 |
|---|---|
| குறித்த காலப்பகுதிக்கான இலாபம் | 2,200 |
| மோட்டார் வாகன விற்பனை இலாபம் | 200 |
| செலுத்திய வருமான வரி | 500 |
| வருடத்திற்கான ஆதன உபகரணத் தேய்வு | 400 |
| நடைமுறைச்சொத்து அதிகரிப்பு (காசு தவிர்ந்த) | 100 |
| வருடத்திற்கான வருமான வரி செலவு | 700 |

கம்பனியின் செயற்பாட்டுச் நடவடிக்கையினால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

……………………………...........................................................................................................................................

47. கீழ்வரும் அட்டவணையினையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கிரயவகைப்படுத்தல் அதன் நோக்கம் என்பவற்றுக்கமைய அமைய பூரணப்படுத்துக?

| கிரய வகைப்படுத்தல் | கிரய வகைப்படுத்தலக்கான நோக்கம் |
|---|---|
| 1) உற்பத்திக்கிரயமும் காலக்கிரயமும் | A |
| 2) B | குறுங்காலத் முகாமைத் தீர்மானமொடுத்தல் |
| 3) தொடர்பானகிரயம் தொடர்பற்ற கிரயம் | C |
| 4) D. | முகாமையின் வகைகூறலுக்கமைய |

48. பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றின் 2020.மார்ச் மாதத்திற்கான இருப்பு உருப்படியென்று தொடர்பானது

| திகதி | விபரம் | தொகை அலகுகள்அலகு | கொள்விலை ரூ |
|---|---|---|---|
| 01.03.2020. | மீதி | 1000 | 600 |
| 15.03.2020. | கொள்வனவு | 1500 | 700 |
| 20.03.2020. | கொள்வனவு | 1500 | 800 |
| 31.03.2020 | விற்பனை | 2000 | |

கீழே தரப்படுகின்ற ஒவ்வொரு விலையிடல் முறையின் அடிப்படையிலும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக?

| **விலையிடல் முறை** | **2020 மார்ச் மாத** | **31.03.2020** |
|---|---|---|
| **இலுள்ளவாறான்** | | |
| | **விற்பனைக்கிரயம்** | **சரக்கிருப்பின் கிரயம்** |
| a) முதல் வந்தது முதல் சென்றது (FIFO) | ரூ…………………… | ரூ…………………… |
| b) நிறையிடப்பட்ட சராசரி முறை | ரூ……………..…….. | ரூ…………………….. |

49. உற்பத்திக்கம்பனி ஒன்றின் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சிக்கனக்கட்டளைத் தொகையினை பயன்படுத்துகிறது மூலப்பொருள் உருப்படியுடன் தொடரபான தகவல்கள் கீழ்வருமாறு கட்டளைக்கிரயம் கட்டளையொன்றுக்கு ரூ.750 இருப்புவைத்தற்கிரயம் வருடத்திற்கு அலகொனறுக்கு ரூ. 10 மாதாந்த மூலப்பொருட்தேவை 5000 அலகுகள்

1) சிக்கனக்கட்டளைத்தொகை அலகுகள் .........................................................

2) வருடாந்தக் கட்ளைக்கிரயம். ரூபா ....................................................................

50. மறுகட்டளைத்தொகை 1000 அலகுகளாக உள்ள போது வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் எவ்வளவு? …........................................................................................................................................................

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | கணக்கீடு - II | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை **புதிய தாளில்** ஆரம்பிக்கவும்.
- பொருத்தமான **செய்கைகள்** இணைக்கப்படுதல் வேண்டும்.

01. ஜெயந்தன் பொதுக் கம்பனியானது விசேட வகை பதார்த்தங்களைக் கொள்வனவு செய்து விற்பனைசெய்கிறது. இந்நிறுவனத்தின் 2020.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி பின்வருமாறு:

| விபரம் | வரவு (000) | செலவு (000) |
|---|---|---|
| 2019.04.01 இல் சரக்கிருப்பு .................................................................. | 3 000 | |
| வியாபார வருமதிகள் .......................................................................... | 8 280 | |
| வங்கியிலுள்ள் காசு ............................................................... | 1 550 | |
| 3 மாத திறைசேரி உண்டியல் (2020.03.30 இல் முதலிட்டது) | 200 | |
| நிதிக் கிரயம் ........................................................................................... | 960 | |
| கொள்வனவுகள் ......................................................................................... | 17 550 | |
| நிர்வாகச் செலவு ........................................................................................ | 1 800 | |
| விநியோகக் கிரயம் ................................................................................... | 1 400 | |
| வருமான வரி செலுத்தியது ................................................................... | 800 | |
| பங்கிலாபம் செலுத்தியது ....................................................................... | 200 | |
| காணி - மீள் மதிப்பு பெறுமதி ............................................. | 6 000 | |
| கட்டடம் - மீள் மதிப்பு பெறுமதி ............................................. | 10 000 | |
| கணினி உபகரணங்கள் - கிரயம் ..................................................... | 2 000 | |
| சொத்தைப் பயன்படுத்தும் உரிமை .................................................... | 1 000 | |
| குத்தகைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான கடப்பாடு................ | | 868 |
| விற்பனைகள் ............................................................................................... | | 28 750 |
| தரகு வருமானம் ........................................................................................ | | 750 |
| வியாபார சென்மதிகள் ............................................................................ | | 2 700 |
| VAT சென்மதி 2019.04.01 இல் ................................................................. | | 100 |
| கட்டடத் திரண்ட தேய்வு - 2020.03.31 இல் ...................................... | | 5 500 |
| கணினி உபகரண திரண்ட தேய்வு - 2020.03.31 இல் .................. | | 1 200 |
| சூழல் பாதுகாப்பு ஏற்பாடு ....................................................................... | | 600 |
| மீள் மதிப்பு ஒதுக்கம் - கட்டடம் ........................................................... | | 700 |
| நிறுத்தி வைத்த வருவாய் - 2019.04.01 இல் .................................. | | 1 872 |
| கூறப்பட்ட சாதாரணப் பங்கு மூலதனம் ............................................ | | 10 000 |
| வருமானவரி ஏற்பாடு (2019.03.31 இல் முடிந்த கணக்காண்டு)….. | | 500 |
| 15% வங்கிக்கடன்(2019.10.01இல் பெறப்பட்டது) | | 1200 |
| | **54 740** | **54 740** |

**மேலதிக தகவல்கள் :-**

*2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்வரும் விடயங்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

1. 2020.03.31 இல் இருப்புப் பதிவேடுகளின் படி கம்பனியின் இருப்புக்களின் பெறுமதி ரூபா 2,500,000 ஆகும் 2020.04.10 இல் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீயினால் 31.03.2020 இல் இருந்த இருப்புக்களில் ரூபா 500,000 கிரயமான இருப்புக்களின் முற்றாக அழிவடைந்தன காப்புறுதிக்கம்பனியிடம் இருந்து ரூபா 300,000 இழப்பீட்டுத்தொகை 2020.05.29 இல் பெறப்பட்டது கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2020.06.20 இல் இயக்குனர்களால் அங்கீகரிக்கப்பட்டது.
2. 2020.01.01 இல் கம்பனியானது கட்டடமொன்றை மேலதிகத் தேவைக்காக வாடகைக்கு பெற்றது.அத்தினத்தில் ரூபா 240,000 ஐ இரு வருட வாடகையாக செலுத்தியது. இத்தொகை நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது
3. நடப்பாண்டிற்கான வருமான வரி ரூபா 1,800,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. செலுத்திய வருமானவரியினுள் கடந்த ஆண்டுக்காக இணங்கிய தொகை ரூபா 400,000 உள்ளடங்கியுள்ளது
4. 2016.04.01 இல் கம்பனியானது குத்தகை உடன்படிக்கை செய்து மோட்டார் வாகனத்தைப் 4 ஆண்டுகள் பயன்படுததுவதற்கான உரிமையினைப் பெற்றுள்ளது 01.04.2016 இல் மோட்டார் வாகனத்தின் பயன்படுததுவதற்கான உரிமையின் நிகழ்காலப்பெறுமதி ரூபா 4,000,000 நடப்பாண்டில் செலுத்தப்பட்ட குத்தகைத் தவணைக்கட்டணம் ரூபா 960,000 நிதிச் செலவில் காட்டப்பட்டுள்ளது. இம் மோட்டார் வாகனத்திற்கு நடப்பாண்டில் பெறுமானத் தேய்விடப்ப்படவில்லை.
5. வருட முடிவில் உள்ள வியாபார வருமதிகளில் ரூபா 180,000 எதிர்ப்பார்க்கை நட்டங்களுக் கான படிகள் என நம்பகரமாக மதிப்பிடப்பட்டது.
6. சூழல் அதிகாரசபையினால் சூழல் பாதுகாப்பு தொடர்பில் கம்பனிக்கு எதிராக சென்றஆண்டு தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு நடப்பாண்டில் கிடைக்கப் பெற்றது. அதனடிப்படையில் கம்பனியானது நட்டஈடாக ரூபா 800,000 ஐ செலுத்தவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இது இன்னும் கணக்கேடுகளில் சீராக்கப்படவில்லை. மேலும் கம்பனியானது சென்ற ஆண்டில் இதுதொடர்பான நம்பகரமான மதிப்பீட்டின் அடிப்படையில் ஏற்பாடொன்றை மேற்கொண்டிருந்தது
7. 2019.04.01 இல் ரூபா 300,000 பெறுமதியான கணினி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இது கொள்வனவாகக் கருதி பதியப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டில், 2017.04.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 500,000 கிரயமான கணினி உபகரணங்கள் 2020.03.31 இல் ரூபா 100,000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. இது தொடர்பான கிரயம் மற்றும் திரண்ட தேய்வு என்பன உரியவாறு அகற்றப்பட்டது கணிணி விற்பனை மூலம் பெறப்பட்ட நட்டம் நிர்வாகச்செலவினுள் உள்ளடங்கியுள்ளது
   
   கணினி உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். கட்டடத்தின் பயன்தரு ஆயுட்காலம் 25 ஆண்டுகள் ஆகும் நடப்பாண்டில் தேய்விடப்பட்டுள்ளதுடன் உரிய செலவு வகுதிக்குள்காட்டப்பட்டுள்ளது.
   
   நடப்பாண்டில் கம்பனியின் காணியானது மீள் மதிப்பிடப்பட்டமையினால் ரூபா 500,000 மிகை ஏற்பட்டுள்ளது. இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் இம் மீள்மதிப்பு மிகை கட்டடமீள்மதிப்பு ஒதுக்கத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
8. கம்பனியானது நடைமுறையாண்டிலிருந்து ஒரு வருட உத்தரவாதத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது. இதற்காக இவ்ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை ரூபா 200,000 நிர்வாகச்செலவினுள் உள்ளங்கியுள்ளது. 2020.03.31 இல் ரூபா 400,000 ஏற்பாடொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும் என நம்பகத்தன்மையுடன் மதிப்பிடப்பட்டது.
9. 01.10.2019 இல் பெறப்பட்ட வங்கிக்கடனானது 30.09.2020 இல் தொடங்கி ஒவ்வொன்றும் ரூபா 358,000 ஆன 5 வருடாந்த தவணைக்கட்டணங்களாக செலுத்தப்படல் வேண்டும்
10. ரூபா 1000,000 பெறுமதியான 5000 உரிமைப்பங்குகள் 2020.01.01 இல் வழங்கப்பட்டு சரியாப்பதியப்பட்டுள்ளது.
11. கம்பனியானது பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கொள்வனவு மற்றும் விற்பனையில் 15% பெறுமதி சேர் வரி அறவிடப்படுகின்றது. மேலும் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள கொள்வனவு மற்றும் விற்பனை மீது பெறுமதி சேர் வரி உள்ளடங்கியுள்ளது

**வேண்டப்படுவது :**

வரையறுத்த ஜெயந்தன் பொதுக் கம்பனியின் பிரசுரிப்பதற்கான பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

1. 2020.03.31 இல் முடிவடைநத் காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்று மடங்கியவருமானக் கூற்று .
2. 2020.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று.
3. 2020.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று .

(40 புள்ளிகள்)

02. அ)

1) மரத்தளபாடம் உற்பத்தி செய்யும் உற்பத்திக் கம்பனியொன்றின் மரப்பலகை தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு.

மூலப்பொருள் விநியோகிப்பதற்கான விலையிடலாக முதல் - உள் - முதல் வெளி' முறை FIFO யினை பயன்படுத்துகின்றது. 2019 மார்ச் மாதத்திற்கான மரப்பலகை தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

களஞ்சியத்திற்கு பெறப்பட்டவைகளும் தெழிற்சாலைக்கு விநியோகிக்கப்பட்டவைகளும்

| திகதி | விபரம் | பலகை (சதுரஅடி) | சதுர அடியொன்றின் விலை (ரூ) |
|---|---|---|---|
| 01.03.2019 | மீதி | 600 | 120 |
| 03.03.2019 | கொள்வனவுகள் | 1000 | 100 |
| 04.03.2019 | விநியோகம் | 800 | |
| 15.03.2019 | கொள்வனவுகள் | 1000 | 110 |
| 20.03.2019 | விநியோகம் | 900 | |

மூலப்பொருள் தொடர்பான ஏனைய தகவல்கள்

தொழிற்சாலையில் மார்ச் 01 இல் மீதி சரக்கிருப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. மார்ச் 31 இல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டாமல் மீதியாக இருந்த மூலப்பொருளுட்கள் 200 அலகுகள் ஆகும், விநியோக காலம், பாவனை தொடர்பான தகவல்கள்

| விபரம் | உச்சம் | இழிவு | சராசரி |
|---|---|---|---|
| நாளொன்றிற்கான மூலப்பொருள் பாவனை (அலகுகள்) | 60 | ? | 50 |
| விநியோகக் காலம் (நாட்கள்) | ? | 10 | 15 |

**வேண்டப்படுவது :**

1. 2019 மார்ச் மாதத்தில் உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்ட பலகைகளின் கிரயம்?
2. 2019 மார்ச் மாதத்தில் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட பலகைகளின் கிரயம்?
3. மறு கட்டளை மட்டம்
4. உச்ச இருப்பு மட்டம்
5. 2019 மார்ச் 31 இல் காணப்பட்ட பலகையின் கிரயம்?
6. நிறையிடப்பட்ட சராசரி முறையினை (WAC) பின்பற்றியிருப்பின் 2019 மார்ச் 31 இல் இருப்பில் உள்ள பலகையின் கிரயம்?

2) பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றின் உற்பத்திப்பொருள் P யுடன் தொடர்புடையனவாகும்

சிக்கனக் கட்டளை தொகை (EOQ) 100 அலகுகள்,

மாதாந்தப்பொருட்தேவை 500 அலகுகள்

கட்டளைக்கிரயமானது கட்டளை ஒன்றுக்கு ரூபா 200,

இருப்பு வைத்தல் கிரயம் அலகொன்றுக்கு ரூபா 240

1) மொத்தக்கட்டளைக்கிரயம் ..........................................................................................

2) கட்டளைத் தொகை 50 அலகுகளாக உள்ள போது

3) மொத்த இருப்பு வைத்தல்கிரயம் ரூ.......................................................................

(20 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த பிரியங்க பொதுக்கம்பனியின் 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று சுருக்கமும் நிதிநிலைமைக் கூற்று தகவல்களும் கீழே தரப்படுகின்றது.

**பிரியங்க கம்பனி வருமானக்கூற்று**

| **விபரம்** | **பெறுமதி ரூபா(000)** |
|---|---|
| விற்பனைகள் (கடன்) | 15 000 |
| விற்பனைக் கிரயம் | 11 400 |
| மொத்த இலாபம் | 3 600 |
| செயற்பபாட்டுச்செலவுகள் | (1 800) |
| வட்டிச் செலவு | (200) |
| வரிக்கு கழிக்க முன் இலாபம் | 1600 |
| வருமானவரி செலவு | (800) |
| காலப்பகுதிக்கான இலாபம் | 800 |

**பிரியங்க கம்பனி** 2020.03.31 இல் நிதிநிலைமைக்கூற்று உருப்படிகள்.

| **விபரம்** | **பெறுமதி ரூபா(000)** |
|---|---|
| மொத்த சொத்துக்கள் | 10 000 |
| நடைமுறைச்சொத்துக்கள் | 4 000 |
| நீண்டகால கடன்கள் | 4 800 |
| சராசரி இருப்புக்கள் | 1 900 |
| சராசரி கடன்பட்டோர் | 1 500 |
| கூறப்பட்டசாதாரணபங்குகள் (100,000 பங்குகள்) | 2 000 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 1 200 |

வருடத்தில் 360 நாட்கள் எனக்கொள்க

**வேண்டப்படுவது :**

2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு பின்வரும் விகிதங்கள் காண்க.

1) வட்டி காப்பு விகிதம்
2) கடன் சேகரிப்புக்காலம்
3) இருப்பு புரள்வு விகிதம்
4) இருப்புப் பேணும் காலம்
5) உரிமையாண்மையில் கடன் விகிதம்
6) நடைமுறைவிகிதம்
7) தேறிய இலாப வீதம்
8) உரிமையின் மீதான விளைவு வீதம்
9) மொத்தச் சொத்துக்களின் மீதான விளைவு வீதம்
10) பங்கொன்றிற்கான உழைப்பு

(20 புள்ளிகள்)

03. ஜமுனா சில்லறை வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். 2020.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு செய்யப்பட்ட வருமானக்கூற்று ரூபா 780,000 இலாபமாகக் காட்டியது. எனினும். பின்வரும் வழுக்கள் இடம்பெற்றது பின்னர் தெரியவந்தது.

1. முற்பணமாக பெற்ற வாடகை வருமானம் ரூபா 60,000 வாடகை வருமானமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.
2. 20.03.2020 இல் விற்பனை அல்லது திருப்புக என்ற நிபந்தனையில் முகவருக்கு அனுப்பப்பட்ட ரூபா 100,000 கிரயம் ஆன ரூபா 160,000 பட்டியல் விலையான பொருட்கள் விற்பனை ஆகாது முகவரிடத்தில் இருந்தது, 31.03.2020 இல் இறுதி இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை
3. 2020.03.24 இல் விற்பனை செய்யப்பட்ட ரூபா 20,000 கிரயம் ஆன ரூபா 30,000 பட்டியல் விலையான பொருட்கள் கொள்வனவாளனால் எடுத்துச் செல்லப்படாத தினால் இறுதி இருப்பினுள் உள்ளங்கியுள்ளது.
4. வியாபாரசெலவு ரூபா 20,000 தொடர்பில் ரூபா 10,000 ஜமுனாவினால் தனிப்பட்ட முறையில்செலுத்தப்பட்டதுடன் மிகுதி செலுத்தப்படாதும் இருந்ததுகணக்கிடப்படவில்லை.
5. விளம்பரத்திற்காக வழங்கப்பட்ட இருப்புக்கின் கிரயம் ரூபா 15,000 கணக்கிடப்படவில்லை.
6. வட்டி ரூபா 20,000 உட்பட, வருடாந்த வங்கிக்கடன் தவணைக் கட்டணம், ரூபா 100,000 செலுத்தப்பட்டது. கணக்கிடப்படவில்லை.
7. கடந்தாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்த வியாபார வருமதியாளர் ரூபா 30,000 இவ்வாண்டில் மீளக்கிடைக்கப்பெற்றிருந்தது காசுக்கணக்கில் இருந்து கடன்பட்டோர் கட்டுப்பாட்டில் செலவு வைக்கப்பட்டது வேறுபதிவுகள் பதியப்பட்டிருக்கவில்லை.
8. உரிமையாளரால் தனது உபயோகத்திற்கென எடுப்பனவு செய்த இருப்புக்கள் ரூபா 20,000 எவ்வித ஏடுகளிலும் பதியப்பட்டிருக்கவில்லை.
9. 2020 ஜுன் 30 இல் முடிவடையும் ஆண்டுக்கு செலுத்திய காப்புறுதிக்கட்டணம் ரூபா 12,000 முழுவதும் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது
10. 2020 மே மாதத்தில் விநியோகிக்கபடவேண்டிய பொருட்களுக்கு கிடைத்த காசு ரூபா 30,000 விற்பனைக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

கணக்கீட்டுப்பதிவுகளின் அடிப்படையில் இருப்பு கணக்கிடப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது :**

1) மேற்படி கொடுக்கல்வாங்கல் நிகழ்வுகள,வழுக்களின் தாக்கத்தை கீழே காட்டப்பட்ட மாதிரியை ஒத்த கணக்கீட்டு சமன்பாட்டில் பெறுமானங்களுடன் அதிகரிப்பு (+) எனவும் குறைவு (-) எனவும் குறிப்பிட்டுக் காட்டுக.

| இல | சொத்துக்கள் | | | | | பொறுப்பு | | | உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ.பொறி உப | வியா இருப்பு | வி.வரு மதி | முற்பண செலவு | காசு | சென்மதி செலவு | முற்பண வருமானம் | வங்கி கடன் | |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |

2) 2020.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு தேறிய இலாபம் சீராக்கும் கூற்று தருக.

3) மேலே தரப்பட்ட உருப்படிகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப்பதிவுகள்

(40 புள்ளிகள்)

04. அ) இளமாறனின் தனி வணிகம் காசுக்கு மட்டுமே தனது விற்பனைகளை மேற்கொள்கிறது. இந்த வணிகம் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2020. ஜனவரி மாத மூல ஏட்டுப்பதிவுகளும் தகவல்களும் கீழ்வருமாறு

**பொது நாட் குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 01.01.2020 | காசு மீதி | 1750000 | |
| | சில்லறை காசு | 12000 | |
| | கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு | | |
| | (பஞ்சன் 10000, கந்தன் 2000) | | 12000 |
| | பெறுமதிசேர் வரி | | 2000 |
| | மூலதனம் | | 173000 |
| | **(ஆரம்ப மீதிகள்)** | **187000** | **187000** |

**கொள்வனவு நாளேடு**

| திகதி ஜனவரி 2020 | பெயர் | தேறியது | பெறுமதி சேர்வரி (VAT) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 04 | பஞ்சன் | 60,000 | 9000 | 69,000 |
| 11 | பாலன் | 60,000 | 9000 | 69,000 |
| 13 | கந்தன் | 40,000 | 6000 | 46,000 |
| 31 | மொத்தம் | 160000 | 24000 | 184,000 |

**வெளித்திரும்பல் நாளேடு**

| திகதி ஜனவரி 2020 | பெயர் | தேறியது | பெறுமதி சேர்வரி (VAT) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 03 | பாலன் | 10,000 | 1,500 | 11,500 |
| 28 | பஞ்சன் | 20,000 | 3,000 | 23,000 |
| | | 30,000 | 4500 | 34,500 |

**சில்லறைக்காசுக் கொடுப்பனவு நாளேடு**

| திகதி | விபரம் | மொத்தம் | அஞ்சல் | பிரயாணம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| 01-01-20 | தபால்மூலம்பார்சல் | 1000 | 1000 | | |
| 06-01-20 | பஸ்கட்டணம் | 2000 | | 2000 | |
| 10-01-20 | புகையிரதகட்டணம் | 1000 | | 1000 | |
| 12-01-20 | தபால் முத்திரை | 1900 | 1900 | | |
| 14-01-20 | ஓட்டோ கட்டணம் | 1000 | | 1000 | |
| 16-01-20 | தபால்முத்திரை | 1100 | 1100 | | |
| 18-01-20 | கந்தன் | 2000 | | | 2000 |
| | | **10000** | **4000** | **4000** | **2000** |

காசுப்பெறுவனவு, காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டிலிருந்து கிடைத்த தகவல்களின்படி ஜனவரி மாதத்திற்கான காசுவிற்பனை பெறுமதிசேர்வரி ரூ.30,000 உள்ளடங்கலாக ரூபா 230,000 பஞ்சனின் தொடக்கமீதி 5 வீத காசுக் கழிவுடன் 14-01-2019 இல் கொடுத்துத் தீர்க்கப்பட்டது .

**வேண்டப்படுவது:-**

1. கடன்கொடுத்தோர் பேரேட்டிலுள்ள தனிநபர்கணக்குகளை தயாரிக்குக.
2. பொதுப்பேரேட்டில் பேரேட்டுக்கணக்கு, தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

ஆ) 2019 டிசம்பர் மாதத்திற்கான சன்டொக் லிமிடெட்டின் வங்கிக் கூற்று கீழே தரப்படுகின்றது.

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 2019.12.01 | மீதி | | | 16 200 |
| 2019.12.10 | காசுவைப்பு | | 30 000 | 46 200 |
| 2019.12.12 | காசோலை 300510 | 24000 | | 22 200 |
| 2019.12.14 | காசோலை வைப்பு 800780 | | 8 800 | 31 000 |
| 2019.12.18 | பங்குஇலாபம் | | 7 000 | 38 000 |
| 2019.12.19 | காசோலை 300512 | 12 000 | | 26 000 |
| 2019.12.20 | காசோலை வைப்பு 600878 | | 6 000 | 32 000 |
| 2019.12.20 | திரும்பிய காசோலை 600878 | 6 000 | | 26 000 |
| 2019.12.24 | காசோலை 300513 | 10 000 | | 16 000 |
| 2019.12.25 | வங்கிக்கட்டணம் | 1 000 | | 15 000 |
| 2019.12.27 | நிலையான கட்டளை காப்புறுதி | 7 000 | | 8 000 |
| 2019.12.31 | 31.12.2019 இல் மீதி | | | 8 000 |

**மேலதிக தகவல்கள்**

1) 2019.11.30 இல் வங்கிக்கூற்று மீதியும் காசுக்கணக்கு மீதியும் வேறுபட்டுவதற்கு காரணமாக வசூலிக்கப்படாதிருந்த காசோலை 600878 ரூபா 6000 ஆகும்
2) இக்கூற்றை நாட்குறிப்புடன் ஒத்துப் பார்த்து கீழே காட்டப்பட்டுள்ள காசோலை வழங்கல் மற்றும் வைப்புக்கள் வங்கிக் கூற்றில் காணப்படவில்லை என கணக்காளர் அறிவித்தார்.

| | | |
|---|---|---|
| காசோலை வழங்கல் | 300 511 | ரூபா 13 000 |
| | 300 514 | ரூபா 7 000 |
| காசோலை வைப்பு | 801 201 | ரூபா 15 000 |

3) விற்பனைக்காசோலைப் பெறுவனவு (800780) ரூபா 8,800 ரூபா காசுப்பெறுவனவு நாளேட்டில் ரூபா 800 ஆகப் பதியப்பட்டிருந்தது.
4) பங்கு இலாபம் வங்கிக் கட்டணம், நிலையியல் கட்டளை என்பன காசுக்கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது :**

1) 2019 டிசம்பர் மாத காசுக்கணக்கு
2) 2019 டிசம்பர் மாத காசுக்கணக்கை திருத்தம் செய்க?
3) 2019 டிசம்பர் மாத வங்கிக்கணக்கு இணக்கக்கூற்று?

(20 புள்ளிகள்)

05. அ) பொற்பதி விளையாட்டுக் கழகத்தின் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல், கொடுத்தற் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| கொள்ளல் கொடுத்தல் கணக்கு | | | |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| 2019 ஜனவரி 1 இல் மீதி | 43,000 | சம்பளமும் கூலிகளும் | 198,000 |
| பொதுவான அன்பளிப்புக்கள் | 230,000 | தளபாடக் கொள்வனவு | 425,000 |
| சந்தாப்பணம் | 900,000 | பராமரிப்புச் செலவுகள் | 235,000 |
| விளையாட்டுத் திடல் மற்றும் அரங்கத்திற்கான அன்பளிப்பு | 1,400,000 | செலுத்தப்பட்ட சோலைவரி | 15,000 |
| | | விளையாட்டுத்திடல் காணிக் கொள்வனவு | 1,000,000 |
| | | 2019 டிசம்பர்.31 இல் மீதி | 700,000 |
| | **2,573,000** | | **2,573,000** |

**மேலதிகத் தகவல்கள்**

1) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2019 ஆம் ஆண்டிற்கான சந்தா தொடர்புபட்டவை.

- ஆண்டின் சந்தாப்பணப் பெறுவனவு 2018 ஆம் ஆண்டிற்கு நிலுவையிலிருந்த மொத்தம் ரூபா 15,000 இனையும் 2020 ஆம் ஆண்டிற்காகப் பெற்ற ரூபா 80,000 இனையும் உள்ளடக்குகின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கு நிலுவையிலிருந்த சந்தாப் பணம் ரூபா 35,000.

2) தளபாடங்கள் 2019 ஜனவரி 1 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 5 ஆண்டு பயன் தரும் ஆயுட்காலத்தை கொண்டது. இது நேர்கோட்டு முறையில் தேய்மானம் இடப்படும்.

3) செலுத்தப்பட்ட சோலைவரி 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கு செலுத்திய ரூபா 5,000 இனை உள்ளடக்குகின்றது.

4) கழகம் மேற்கூறப்பட்ட மீதிகள் தவிர கீழ்வரும் மீதிகளை கொண்டிருந்தன.

| | |
|---|---|
| உபகரணம் - 2018 டிசம்பர் 31 இல் பதிவழிப்புப் பெறுமதி | 342,000 |
| உபகரணம் - 2019 டிசம்பர் 31 இல் பதிவழிப்புப் பெறுமதி | 300,000 |

ஆண்டின்போது உபகரணம் தொடர்பில் சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இடம்பெறவில்லை.

5) 01.01.2019 இல் 5 வருடபயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட ரூபா 500,000 பெறுமதியான முச்சக்கரவண்டியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அது அத் தினத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது. இவ் அன்பளிப்பானது நடைமுறை ஆண்டிலிருந்து 5 வருடங்களுக்கான சமமான வருமானமாக இனங்காணப்படும்.

6) விளையாட்டுத் திடல் மற்றும் அரங்கத்திற்கான அன்பளிப்பு நிதியில் இருந்து காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது

7) 2019 ஜனவரி 1ஆம் திகதி திரண்ட நிதியம் ரூபா 400,000.

**செய்ய வேண்டியது:**

a) 2019 12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்றினை தயாரிக்குக

b) 2019 டிசம்பர் 31 இல் நிதிநிலைக் கூற்றினை தயாரிக்குக. (20 புள்ளிகள்)

ஆ) கமணியும் லலனியும் இலாப, நட்டங்களை சமமாக பகிரும் வகையில் பங்குடமை வியாபாரத்தை நடாத்தி வருகின்றனர். வியாபாரத்தின் முகாமையாளராக பணியாற்றி வந்த ரமணி, 2020 மார்ச் 31ந் திகதி இலாப, நட்டத்தை கமணி மற்றும் லலனியுடன் சமமாக பகிரும் வகையில் கீழ்வரும் கட்டுறுப்புகளுக்கு அமைய வியாபாரத்தின் பங்காளராக இணைந்துகொண்டார்:

i) ரமணி பங்காளராக சேரும்போது வியாபாரத்தின் நன்மதிப்பு ரூபா 300,000 ஆக இணங்கப்பட்டது. இது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும்.

ii) ரமணியின் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,000,000 ஆக இணங்கப்பட்டது. இதில் ரூபா 600,000 காசாக செலுத்தப்பட்டது. எஞ்சிய தொகைக்கு சில அலுவலக உபகரணங்களை வழங்கியிருந்தார். இதுதொடர்பாக எக்கணக்குப் பதிவுகளும் மேற்கொள்ளப் படவில்லை.

iii) 2020 மார்ச் 31ந் திகதியில் வருமானக் கூற்று தயாரிக்கப்பட்ட பின்னர் பங்குடடையின் பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா. '000 | |
|---|---|---|
| **விபரம்** | **வரவு** | **செலவு** |
| ஆதனம் பொறி உபகரணம் | 2,600 | |
| தொக்கு (கிரயத்தில்) | 300 | |
| காசு | 800 | |
| ரமணி அறிமுகப்படுத்திய காசு | | 600 |
| மூலதனக் கணக்கு - கமணி | | 800 |
| மூலதனக் கணக்கு - லலனி | | 900 |
| சம்பளம் செலுத்தியது - கமணி | 170 | |
| மூலதனவட்டி செலுத்தியது கமணி | 50 | |
| மூலதனவட்டி செலுத்தியது லலணி | 80 | |
| நடைமுறைக் கணக்கு - கமணி 01.04.2019 இல் | | 90 |
| நடைமுறைக் கணக்கு - லலனி 01.04.2019 இல் | | 50 |
| ஆண்டிற்கான இலாபம் | | 1,560 |
| | **4,000** | **4,000** |

**மேலதிகத் தகவல்கள்:**

1. கமணி மற்றும் லலனிக்கு இடையிலான உடன்படிக்கையிலிருந்து பிரித்தறியப்பட்ட தகவல்கள்:
   - கமணி ரூபா 25,000 மாதாந்த சம்பளத்திற்கு உரித்துடையவர்.
   - ஒவ்வொரு பங்காளருக்கும் அவர்களின் ஆரம்ப மூலதன மீதியில் ஆண்டிற்கு 10% வட்டி செலுத்தப்பட வேண்டும்.
   - அனேக தொலைபேசி அழைப்புக்கள் வியாபாரம் தொடர்புபட்டதாக இருப்பதன் காரணமாக, பங்காளர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி செலவுகளை பங்குடமையிலிருந்து மீளப் பெறுவதற்கு உரித்துடையவராவர்.
2. 2020 மார்ச் மாதத்திற்காக கமணி சமர்ப்பித்த, ரூபா 30,000 தொலைபேசிப் பட்டியல் 2020 ஏப்ரலில் செலுத்தப்படும்வரை கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.
3. ஆண்டிற்கான இலாபத்தினை கணித்தலில் கட்டடம் மீதான தேய்மானம் ரூபா 20,000 அலுவலக உபகரணங்கள் மீதான தேய்வு ரூ.40,000. கணக்கிற் கொள்ளப்படவில்லை.
4. ஆண்டின்போது, லலனி வியாபாரத்திலிருந்து ரூபா 40,000 கிரயமான தொக்கினை எடுத்திருந்தபோதிலும், இது இன்னும் கணக்கிற் கொள்ளப்படவில்லை.
5. 2020 மார்ச் 31ந் திகதியில் இருப்பிலுள்ள பௌதிகத் தொக்குகளின் கிரயம் ரூபா 240,000 ஆகக் காணப்பட்டது. இந்த மீதிக்கும் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள தொக்குகளின் மீதிக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு மோசடி காரணமாக ஏற்பட்டதாகும். இந்த வேறுபாட்டினை பதிவழிக்க இணங்கப்பட்டுள்ளது.
6. கமணிக்கு செலுத்திய சம்பளம் ரூபா 100,000 நிர்வாகச்செலவினுள் உள்ளடங்கியிருந்தது.

**கீழ்வருவனவற்றை தயாரிக்குக:**

a) ஆண்டிற்கான இலாபம் எவ்வாறு திருத்தப்படவேண்டும் என்பதனை காட்டும் கூற்று
b) 2020 மார்ச் 31ந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான பங்காளர் மூலதனக் கணக்குகள்.
c) 2020 மார்ச் 31ந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான பங்காளர் நடைமுறைக் கணக்குகள்.

(20 புள்ளிகள்)

06. அ) வரையறுத்த விஸ்வா பொதுக்கம்பனியின் ஆதன பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்கள் 2019.04.01 இல் காணப்பட்டவை.

| சொத்து உருப்படி | 2019.04.01 இல் கொண்டு செல் ரூபா. 000 | 2019.04.01 இல் திரண்டதேய்வு ரூபா.000 | இழிவு பெறுமதி ரூபா 000 | ஆயுட்காலம் வருடம் |
|---|---|---|---|---|
| காணி | 240 | | | |
| கட்டடம் | 460 | 160 | 20 | 30 |
| விநியோக வாகனம் | 580 | 300 | 80 | 8 |

2020.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கு ஆதனம் பொறி உபகரணம் தொடர்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

1. காணியானது தற்போதைய சந்தை மதிப்பிற்கு ஏற்ப ரூபா 340 000 ஆக மீள மதிப்பிடப் பட்டது. இக்காணியானது 2017.03.31 இல் முதல் தடவை மீள் மதிப்பிடப்பட்ட போது நட்டம் ரூபா 60 000 ஏற்பட்டது.
2. 2019.04.01 இல் கட்டடங்களுக்கு ரூபா 100 000 கிரயத்தில் நவீனமயப்படுத்தப்பட்டதுடன் அதன் ஆயுட்காலம் 30 இல் இருந்து 33 வருடங்களாக அதிகரித்ததும், இழிவு பெறுமதி ரூபா 10 000 என மதிப்பிடப்பட்டது.
3. 2020.01.01 இல் கம்பனியிலிருந்த விநியோக வாகனத்தினை பதிய வாகனம் ரூபா 900 000 பெறுமதிக்கு பகுதி மாற்றீடு செய்து கொண்டது. இதற்காக செலுத்திய காசு ரூபா 400 000 ஆகும். புதிய வாகனத்தின் ஆயுட்காலம் 11 வருடங்கள் இழிவு பெறுமதி ரூபா 20 000 என தீர்மானிக்கப்பட்டது.
4. 01.04.2019 இல் கம்பனியானது பினான்ஸ் கம்பனியுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்தது. அதற்கு இணங்க இயந்திரமானது மூன்று வருடங்களுக்கு குத்தகைக் கொடுப்பனவினைச் செலுத்துவதன் பிரகாரம் வழங்கப்பட்டது. ஏதிர்பார்க்கும் ஆயட்காலம் 3 ஆண்டுகள் வருடாந்த குத்தகை கட்டணக் கொடுப்பனவுகள் கீழ்வருமாறு
   31.03 2020 இல் ரூ 400,000
   31.03 2021 இல் ரூ 400,000
   31.03 2022 இல் ரூ 400,000
   31.03 2022 இல் இறுதிக்கொடுப்பனவு ரூ 20000 ஆகவும் குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதம் 10%. ஆகவும் உள்ளது. கழிவுக்காரணி 10% வீதத்தில்.

| வருடம் | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| கழிவுக்காரணி | 0.91 | 0.83 | 0.75 |

5. கட்டடம், விநியோக வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் தேய்வு இடப்படுகிறது.

**வேண்டப்படுவது :**

2020.03.31 இல் முடிவடைந்த வருட காலப்பகுதிக்கு

1) காணி மீள்மதிப்பீடு தொடர்பான நாட்குறிப்பு பதிவு தருக.
2) கட்டட தேய்வு
3) மோட்டார் பகுதி மாற்று கணக்கு
4) குத்தகைப் பொறுப்பின் நிகழ்காலப் பெறுமதி
5) சொத்து பயன்படுத்தல் உரிமை கணக்கு
6) குத்தகைத் கட்டணத்தினைச் செலுத்துவதற்கான கடப்பாட்டுக் கணக்கு
7) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனையமுற்றுமடங்கிய வருமானக் கூற்றில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை காட்டவும். (மேலேஉள்ள கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் காரணமாக)

(20 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவல்கள் வரையறுத்த மதுரா பொதுக் கம்பனியின் 2020 03. 31 ல் முடிவுற்ற ஆண்டு காலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பற்றியதாகும்

1. ஆண்டுக்குரிய மொத்தவிற்பனைகள் ரூபா 750,000 .கடன்பட்டோர் மீதி ரூபா 50,000 ல் குறைவடைந்தது., 2019 ஆம் ஆண்டு தொடக்கம் சகலகொள்வனவுகளும் கடனுக்கே செய்யப்பட்டன மொத்தக கொள்வனவுகள் ரூபா 550 000 ஆக இருந்தது அதில் 80% ஆண்டுகாலத்தில் தீர்க்கப்பட்டது. இதுதொடர்பில் கிடைத்தகழிவீடு ரூ.40.000 ஆகும்.
2. ரூபா 70000 பெறுமானத்தேய்வு உட்படஆண்டுக்கான மொத்த தொழிற்பாட்டுச்செலவுகள் ரூபா 190,000 ஆக இருந்தது இத்தொகையில் ரூபா 10,000 ம் 2020.03.31 ம் ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டியதாகும். 2019.04.01 இல் தொழிற்பாட்டுச்செலவுகளில் முற்பண அட்டுறு செலவுகள் எவையும் இருக்கவில்லை.,ஆனால் 2021.03.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான செலவுகள் ரூபா 18,000 நடப்பாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.
3. ஆண்டுகாலத்தில் செலுத்தப்பட்ட பிறசெலவுகள் வட்டிச்செலவுகள் ரூ.10000
   வருமானவரி ரூபா .50 000
4. ஆண்டுஇலாபத்தில் செலுத்தப்பட்ட இடைக்காலப்பங்கு இலாபங்கள் மொத்தம் ரூபா 20 000
5. 2020.01.31 ல் கம்பனி ஒவ்வொன்றும் 15ரூபா வான 20 000 சாதாரண பங்குகளினை வழங்கியிருந்தது.
6. ஆண்டில் கம்பனி நெடுந்தவணை வங்கிக்கடனொன்றின் பகுதித்தீர்ப்பனவாக ரூ.200 000 எனும் தொகையைச் செலுத்தியது..
7. 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது உபயோகத்திற்கு ரூ. 500,000 கிரயமான அலுவலக உபகரணங்களை குத்தகைக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தது உடன் கொடுப்பனவாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 100 000
8. 01.04.2019 இல் கம்பனியானது புதிய வாகனம் ஒன்றை காசுக்கு கொள்வனவு செய்ததுடன் அதே திகதியில் காரியாலய உகரணமொன்றை ரூபா 160,000 இலாபத்துடன் ரூபா 500,000 காசுக்கு விற்பனை செய்துள்ளது இவ்ஆண்டில் ஆதனம்பொறி உபகரணங்களின் கொண்டுசெல் மீதியானது ரூபா 410,000 ஆல் அதிகரித்துள்ளது
9. 2019.04.01ஆம் திகதியன்று காசாவும் வங்கி மீதியாகவும் இருந்த தொகை ரூபா 120,000 ஆகும்.

**வேண்டப்படுவது**

LKAS 7 நியமத்திற்கமைய நேர் முறையைப்பயன்படுத்தி 31டிசம்பர் 2020 ல் முடிவுற்ற காலப்பகுதிக்கான காசுப்பாய்சல்கூற்று

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)